**ONE TWO ACADEMY**

**10 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 9**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம்
   ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
2. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ...... வேண்டினார்.
   அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
   இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக
3. வாய்மையே மழை நீராகி - இத் தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
4. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது:
   அ) தம் வாழ்க்கை யில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
   ஆ) சமூகப் பார்வைய ோடு கலைப்பணி புரியவே எழுதினார்
   இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
   ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்
5. "இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும் ..." - இவ்வடிகளில் கற்காலம் என்பது
   அ) தலைவிதி ஆ) பழைய காலம்
   இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

6. “தர்க்கத்திற்கு அப்பால்” சிறுகதை அமைந்த தொகுப்பு - .........................
   அ) ரிஷிமூலம் ஆ) யுகசந்தி
   இ) குருபீடம் ஈ) ஒரு பிடி சோறு

7. தொழிலாளர்களின் மனச் சுமையை அறியாதது ..........................
   அ) கட்டடம் ஆ) செங்கற்கள்
   இ) கம்பிகள் ஈ) மணல்

8. திருமுழுக்கு யோவானுக்கு வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இட்ட பெயர்............................
   அ) கருணாகரன் ஆ) கருணையன்
   இ) கருணாமூர்த்தி ஈ) வலின்

9. தீவகம் என்ற சொல்லின் பொருள் ..................
   அ) விளக்கம் ஆ) சான்று
   இ) விளக்கு ஈ) வெளிச்சம்

10. இயல்பாக உரியச் சொற்களின் மூலம் கூறுவது..................அணி ஆகும்.
   அ) தற்குறிப்பேற்றணி ஆ) நிரல்நிறை அணி
   இ) உயர்வு நவிற்சி அணி ஈ) தன்மையணி

II <u>எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்</u> **8 X 2 = 16**

11. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் " - உவமை உணர்த்தும் கருத்து யாது?

12. அன்பும் அறனும் உடைத்தா யின் இல்வாழ்க்கை
    பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

13. தீவக அணியின் வகைகள் யாவை ?

14. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

**15. மொழிபெயர்க்க.**

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein

2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb

**16.அகராதியில் காண்க.**

அ) குணதரன் ஆ) செவ்வை

**17.கலைச்சொல் அறிவோம்:**

அ) Humanism ஆ) Cultural values

**18.உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1. தாமரை இலை நீர்போல

2. மழைமுகம் காணாப் பயிர்போல

**19.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**20.பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.**

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்

கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை

காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை

செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன் றோ

**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21.எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

22.கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

23."சித்தா ளின் மனச்சுமைகள்

செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.கருணையனின் தாய் மறை வுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவகமலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

25. 'அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநல ப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

27.ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க .